https://puthusudar.lk/
puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

14TH JULY 2024 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 88

# ஒரு வாக்காளருக்கு 5 ரூபா மட்டுமே:




# வேட்பாளர் ஒருவர் செலவழிக்க வேண்டிய உச்ச தொகை

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஒரு வேட்பாளர் பிரசார நடவடிக்கைகளுக்காக ஒரு வாக்காளருக்கு 5 ரூபா மட்டுமே செலவழிக்க

02



## இந்த மாத இறுதிக்குள் தேர்தல் திகதி அறிவிப்பு

ஜனாதிபதி தேர்தலுக்கான திகதி இந்த மாத இறுதிக்குள் அறிவிக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

02

## அமைச்சர்கள், எம்பிக்களுக்கு இறுதி அறிவித்தல்

தமது சொத்து விபரங்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி அறிவித்தலை லஞ்ச,ஊழல் ஆணைக்குழு அமைச்சர்கள் மற்றும் எம்பிக்களுக்கு விடுத்துள்ளது.

இதுவரை 100 எம்பிக்கள் மாத்திரமே சபாநாயகரிடம் தமது சொத்து விபரங்களை சமர்ப்பித்துள்ளனர். மிகுதி எம்பிக்களும் அமைச்சர்களும் இன்னும் சமர்ப்பிக்கவில்லை. அவர்களுக்கே இந்த இறுதி அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்களும் இராஜாங்க அமைச்சர்களும்

02



## பொன்சேகாவுக்கு வெட்டு புதிய தவிசாளராக கபீர்

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசாவுக்கும் அக்கட்சியின் தவிசாளர் சரத் பொன்சேகாவுக்குமிடையிலான முறுகல் நிலையின் உச்சக்கட்டமாக பொன்சேகாவை கட்சியின் தவிசாளர் பதவியில் இருந்து நீக்கி கபீர் ஹாசீமை அப்பதவிக்கு நியமிப்பற்கு அக்கட்சி தீர்மானித்துள்ளதாக அறிய முடிகிறது.

02



புதுசுடர்
www.puthusudar.lk
2024 JULY 14 - SUNDAY

# ஓடி ஒளிவாரா சஜித்?

ஜனாதிபதி தேர்தலை ஒத்திப்போடுவதற்கு அரசு என்னதான் முயற்சிகளை எடுத்தாலும் அவை அனைத்தும் தோல்வியிலேயே முடிந்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

ஜனாதிபதியின் ஆயுட்காலம் ஐந்து வருடங்கள்தான் என்று நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அடுத்து தேர்தலை ஒத்திப்போடும் அரசின் அத்தனை முயற்சிகளும் தோல்வியிலேயே முடிந்துள்ளன.

உண்மையில் ,தேர்தலை ஒத்திப்போடுவதற்கு அரசு பல முயற்சிகளை எடுத்து வந்தது.

ஐக்கிய தேசிய கட்சியின் பொது செயலாளர் பாலித ரங்கேபண்டா இது தொடர்பில் முதல் குண்டைத் தூக்கிப்போட்டார்.

இரண்டு வருடங்களுக்கு தேர்தலை ஒத்திப்போடுவதற்காக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று அவர் யோசனை ஒன்றை முன்வைத்தார்.

அந்த யோசனை எடுபடவில்லை. அனைவரும் எதிர்க்கத் தொடங்கினர். மொட்டு கட்சிகூட இதற்கு ஆதரவில்லை.

இதனால் அது அப்படியே அடங்கிப்போனது.இருந்தும்,ஒத்திபபோடல் முயற்சியை ஜனாதிபதி கைவிடவில்லை.இன்னொரு முயற்சியை ரணில் மேற்கொண்டார்.. அதுதான் சர்வஜன வாக்கெடுப்பின்றி நாடாளுமன்றத்தின் ஊடாக ஒரு வருடத்துக்கு ஜனாதிபதியின் ஆயுட்காலத்தை நீடித்தல்.

6 வருடங்களாக இருந்த ஜனாதிபதியின் ஆயுட்காலம் 19ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக 5 வருடங்களாக குறைக்கப்பட்டது.

குறைக்கப்பட்ட அந்த ஒரு வருடத்தை மீண்டும் பெற்றுக்கொள்ள முடியும் என்று சில சட்ட வல்லுநர்கள் ரணிலுக்கு ஆலோசனை வழங்க,அந்த ஒரு வருடத்தை இணைத்துக்கொண்டு ஒரு வருடத்துக்கு ஜனாதிபதியின் ஆயுட்காலத்தை நீடித்து தேர்தலை ஒரு வருடத்துக்கு ஒத்திப்போடும் வேலையில் ஜனாதிபதி இறங்கினார்.

ஆனால்,இந்த முயற்சிக்கும் மொட்டு கட்சி எதிர்ப்புத் தெரிவித்தது. தேர்தலை ஒத்திப்போடப்படக்கூடாது. .உரிய நேரத்தில் நடத்தப்பட வேண்டும் என்பதே மொட்டு கட்சியின் நிலைப்பாடு என்று பொது செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

மொட்டு கட்சியின் ஆதரவு இல்லாமல் ரணிலால் நாடாளுமன்றில் எந்தவொரு பிரேரணையையும் சட்ட மூலத்தையும் நிறைவேற்ற முடியாது.

இருந்தும்,ரணிலுக்கு ஆதரவாக வர்த்தகர் ஒருவர் நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்து ஜனாதிபதியின் ஆயுட்காலம் 6 வருடங்கள் என உத்தரவிட வேண்டும் என்று கூறினார்.

19ஆவது அரசமைப்பின்படி,ஜனாதிபதியின் ஆயுட்காலம் 5 வருடங்களே என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.இதனால் இந்த வருடம் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறுவது உறுதியாகிவிட்டது.

இப்போது அரசு தேர்தலை எதிர்கொண்டே ஆகவேண்டும் இதனால், எதிர்க்கட்சிகளுக்கு எதிராக பொய்யான கூற்றுக்களை முன்வைத்து அதனூடாக தேர்தலை வெற்றிகொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.அதில் ஒன்றுதான் இந்தத் தேர்தலில் சஜித் பிரேமதாசா போட்டியிடமாட்டார்.ஓடி ஒளிந்துகொள்வார் என்ற பிரசாரம்.

ஐக்கிய தேசிய கட்சியின் பொது செயலாளர் பாலித ரங்கேபண்டா இதைக் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சிகளின் பக்கம் வெற்றி காற்று அடிக்கும்போது சஜித் ஏன் ஓடி ஒளியவேண்டும் என்பதுதான் இப்போது அனைவரும் எழுப்பும் கேள்வி.

---

## ஒரு வாக்காளருக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

**வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.**

**அவ்வாறு செலவளித்தால்கூட மொத்த வாக்காளருக்குமான ஒரு வேட்பாளரின் செலவு எட்டரைக் கோடி ரூபாவாக அமையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் கட்சிகளின் செயலாளர்களுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.**

**தேர்தல் தொடர்பில் நடைமுறையில் இருக்கும் சட்ட,திட்டங்களுக்கு அமைவாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.**

---

## இந்த...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

ஜனாதிபதி தேர்தலை நடாத்துவதற்கான அதிகாரம் இந்த மாதம் புதன் கிழமை 17ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கிறது.அன்றைய தினமே தேர்தலுக்கான திகதியை அறிவிக்க முடியாது என்றும் இந்த மாத இறுதிக்கு முன் அறிவிக்க முடியும் என்றும் அவர் மேலும் கூறினார்.

---

## அமைச்சர்கள்...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

ஜனாதிபதியிடமும் எம்பிக்கள் சபாநாயகரிடமும் சொத்து விபரங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

## பொன்சேகாவுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

மேலும்,பொன்சேகா வகித்து வரும் களனி தொகுதி அமைப்பாளர் பதவிக்கு நாலககொடஹேவா எம்பியை நியமிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அக்கட்சி வட்டாரம் தெரிவிக்கிறது.









# ரணிலுக்கு வெட்டு: தனி வேட்பாளரை நிறுத்தப்போகிறதா மொட்டு?

ஜனாதிபதியின் ஆயுட்காலத்தை 6 வருடங்கள் என அறிவிக்க வேண்டும் என வர்த்தகர் ஒருவர் நீதிமன்றில் தாக்கல் செய்த மனுவுக்கு நீதிமன்றம் தீர்ப்பு ஒன்றை வழங்கிவிட்டது.

அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தின்படி,ஜனாதிபதியின் ஆயுட்காலம் 5 வருடங்களே என்று நீதிமன்றம் திட்டவட்டமாக அறிவித் துவிட்டது.இதனால்,ஜனா திபதியின் ஆயுட்காலத்தை ஐந்து வருடங்களாக நிறைவு செய்து ஜனாதிபதி தேர்தல் இந்த வருடம் ஒக்டோபர் மாதம் இடம்பெறுவது உறுதியாகிவிட்டது.

ஜனாதிபதி தேர்தல் இன்னும் அறிவிக்கப்படாதபோதிலும், அதற்கான சூடு மட்டும் குறையவே இல்லை.அது நாளுக்கு நாள் கூடிக்கொண்டே செல்கிறது.எதிர்க்கட்சிகளும் ஆளுங்கட்சியும் போட்டி போட்டுக்கொண்டு பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றன.

இத்தேர்தலையொட்டி தினமும் ஏதாவது ஒரு புது தகவல் வெளிவந்துகொண்டே இருக்கிறது.அதில் ஒன்றுதான் மொட்டு கட்சி தனியாக வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் என்ற மஹிந்த ராஜபக்சவின் அறிவிப்பு.

அது உண்மையாக இருக்குமாக இருந்தால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பாடு அவ்வளவுதான்.மொட்டும் ஐக்கிய தேசிய கட்சியும் சேர்ந்து போட்டியிட்டால்கூட ரணில் வெல்வது கஷ்டம் என்ற நிலைமை இருக்கும்போது,ரணிலை தனியே விட்டுவிட்டு மொட்டு தனியே இறங்கினால் ரணில் போட்டி என்ற வட்டத்துக்குள்ளேயே வரமாட்டார்.

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் மொட்டு கட்சிக்குள் இரண்டு நிலைப்பாடுகள் உள்ளன.ஒரு தரப்பு ரணிலை பொது வேட்பாளராக நிறுத்தி மொட்டு கட்சி அவருக்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளது.இன்னொரு தரப்பு மொட்டு தனியாக வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்று சொல்கிறது.

அரசில் இணைந்திருக்கும் மொட்டு அமைச்சர்கள்,இராஜாங்க அமைச்சர்கள் அனைவரும் ரணிலுக்கே ஆதரவு.அமைச்சுப் பதவிகள் கிடைக்காத மொட்டு எம்பிக்கள் மத்தியிலும் இரண்டு நிலைப்பாடுகள் உள்ளன.

மொட்டின் இளம் எம்பிக்கள் தனியான வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்று கூறுவது மாத்திரமல்ல நாமல் ராமஜபக்சவையே நிறுத்த வேண்டும் என்று கூறுகின்றனர்.

ஆனால்,பசில் உள்ளிட்ட சீனியர்களுக்கு இதில் உடன்பாடு கிடையாது. அவர்கள் ரணிலுக்கே ஆதரவு வழங்குகின்றனர்.

கோத்தாபய ராமஜபக்ச ஜனாதிபதி பதவியில் இருந்து விரட்டப்பட்டதன் பின்னர் ரணிலை ஜனாதிபதியாக்குவதற்கான அணைத்து ஏற்பாடுகளையும் செய்தவர் பசில் ராஜபக்சதான்.

பசிலின் பார்வையில் ரணில் எந்த நோக்கத்துக்காக ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டாரோ அந்த நோக்கத்தை ரணில் நிறைவேற்றிவிட்டார். அதாவது,பொருளாதார முன்னேற்றம் மற்றும் ராஜபக்ச குடும்பத்தின் பாதுகாப்பு.

இதனால்,மீண்டும் ரணிலே ஜனாதிபதியாக வர வேண்டும் என்று பசில் விரும்புகிறார். அமெரிக்காவில் இருந்து நாடு திரும்பிய பசில் ரணிலுக்கு ஆதரவாக பிரசாரம் செய்யத் தொடங்கினார்.

ஆனால்,மஹிந்த ராஜபக்சவோ பசில் போட்டியிட வேண்டும் என்று விரும்பினார்.பசிலுக்கு விருப்பமில்லை.ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதை விடவும் அமெரிக்க பிரஜா உரிமையே அவருக்கு மேல்.

அமேரிக்கா பிரஜா உரிமையை இரத்துச் செய்து கோத்தா படும் பாடு தெரியும்தானே.அதனால் பசில் அதை ரத்து செய்ய விரும்பவில்லை.

இதனால்தான் நாமலை இறக்க வேண்டும் என்று கட்சிக்குள் கோரிக்கை முன்வைக்கப்படுகிறது. இப்போது தனி வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்படுவார் என்று மஹிந்த கூறி இருப்பதானது நாமலை மனதில் வைத்துக்கொண்டுதானோ தெரியாது.

ரணிலை பொது வேட்பாளராக இறக்கினாலும் வெல்ல முடியாது என்று தெரிந்ததனால் நாமலை மொட்டின் தனி வேட்பாளராக இறக்கி அவரைப் பதப்படுத்தி எடுப்போம் என்று மஹிந்த எண்ணுகிறாரோ தெரியாது.

இதனால்,ரணில் விக்ரமசிங்க இந்தத் தேர்தலில் பெரும் நெருக்கடியை -சவாலை எதிர்நோக்கப்போகிறார் என்பது மட்டும் உறுதி.




# ஒலிம்பிக் பங்காளராக Samsung

பாரிஸ் ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக் விளையாட்டு விழாவின் உலகளாவிய பங்காளரான சாம்சங் எலெக்ட்ரோனிக்ஸ், தனது 'Open always wins' பிரச்சாரத்தை அண்மையில் உத்தியோகாப்பூர்வமாக ஆரம்பித்துள்ளது.

அத்துடன், இம்முறை ஒலிம்பிக்கின் முக்கியத்துவத்தையும், சிறப்பையும் குறிக்கும் வகையில் பாரிஸில் Champs-Elysees 125 இல் Olympic™ rendezvous என்ற காட்சியறை ஒன்றும் Samsung நிறுவனத்தினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பாரிஸ் 2024 ஒலிம்பிக் விளையாட்டு விழா ஆரம்பமாவதற்கு 100 நாட்கள் எஞ்சியிருக்கும் நிலையில், இம்முறை ஒலிம்பிக்கை இலக்காகக் கொண்டு 'Open always wins' பிரச்சாரத்தின் மூலம் Samsung மீதான நம்பிக்கையை நுகர்வோருக்குக் கொண்டு செல்வதில் அந்த நிறுவனம் வெற்றி பெற்றது.

வீரர்கள் தங்கள் வலிமை மற்றும் திறமை மூலம் எப்படி வெற்றியைத் தொடர்கிறார்கள் என்பதை வெளிப்படுத்திய இந்த பிரச்சாரமானது, skateboarder Aurélien Giraud (பிரான்ஸ்), பாரா குறுந்தூர ஓட்ட வீரர் துழாயநெைள Floors (ஜெர்மனி) மற்றும் break-dancer Sarah Bee (பிரான்ஸ்) ஆகியோரை உள்ளடக்கிய Samsung Galaxy மெய்வல்லுனர் அணியிரால் ஒரு சிறப்பு நிகழ்ச்சியாக காண்பிக்கப்பட்டது.

# ஆசியாவின் பொதியிடலில் மாநாடு



ஆசியாவில் பொதியிடலில் நிலைபேறுதன்மை 2024' (Sustainability in Packaging Asia 2024) மாநாடு ஜூன் மாதம் 04ஆம் திகதி முதல் 06ஆம் திகதி வரை சிங்கப்பூரில் வெற்றிகரமாக நடைபெற்றது.

இந்த உயர்மட்ட மாநாட்டில் பொதியிடல் துறையில் முன்னணியில் உள்ள விநியோகத்தர்கள் கலந்துகொண்டு, தம்மால் தயாரிக்கப்பட்ட நிலைபேறுதன்மை கொண்ட புதிய பொதியிடல் தீர்வுகளைக் காட்சிப்படுத்தினர்.

இதன் ஊடாக ஈடு இணையற்ற உள்ளீடுகள், ஒன்றிணைந்த ஆய்வுகள், முன்னணியான குழுக் கலந்துரையாடல்கள், புதிய போக்குகள் மற்றும் நிலைபேறான பொதியிடல் சந்தையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் தொடர்பில் முழுமையான புரிதலை பொதியிடல் துறையில் உள்ள தொழில்வல்லுணர்கள் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக் கிடைத்தது.

பொதியிடலில் ஆய்வுகள், ஆலோசனைகள், தகவல்கள் மற்றும் குறித்த சேவைகளை வழங்குவதில் முன்னணியாகத் திகழும் பல்தேசிய நிறுவனமான ஸ்மித்தேர்ஸ் (Smithers) இந்த மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தது.

# அம்பேவலை பாற்பண்ணைக்கு ஜனாதிபதி விஜயம்



அம்பேவலை பாற்பண்ணைக்கு அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் விஜயம் மேற்கொண்டிருந்தார்.

2022 டிசம்பரில் அவர் மேற்கொண்டிருந்த ஆய்வு விஜயத்தைத் தொடர்ந்து, ஜனாதிபதி அவர்கள் தற்போது விசேட விஜயத்தை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஜனாதிபதி அவர்கள் கடந்த முறை விஜயம் மேற்கொண்டிருந்த சமயத்தில் அம்பேவலையில் விரிவான அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்திருந்ததுடன், இப்பண்ணை கணிசமான அளவில் அபிவிருத்தி செய்யப்படுவதற்கு அதுவே தூண்டுதலாக அமையப்பெற்றது.

வளாகத்தை பார்வையிட்ட ஜனாதிபதி அவர்கள், புதிதாக இடம்பெற்று வருகின்ற அபிவிருத்தி முயற்சிகளின் மேம்பாடு குறித்து மீளாய்வு செய்ததுடன், மேம்பாடுகள் குறித்து விசேடமாக குறிப்பிட்டதுடன், தேசிய பொருளாதாரத்திற்கு இப்பண்ணையின் முக்கியமான பங்களிப்பு குறித்தும் கருத்து வெளியிட்டார்.

ஊழியர்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகளுடன் அளவளாவிய ஜனாதிபதி அவர்கள் இப்பண்ணையின் அபிவிருத்திக்கு தேவையானவற்றை புரிந்து கொண்டு, அவற்றுக்கு உதவுவதில் தனது அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்தினார்.




# யூனியன் அஷ்யூரன்ஸ் –இலங்கை நீரிழிவு சம்மேளனம் இணைவு

இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், இலங்கை நீரிழிவு சம்மேளனத்துடன் (DASL) மூலோபாய பங்காண்மையை ஏற்படுத்தியுள்ளது.

அதனூடாக, நாட்டில் தற்போது நிலவும் உயர்ந்த நீரிழிவு நிலையை கட்டுப்பாட்டினுள் கொண்டுவருவது தொடர்பில் கவனம் செலுத்தவுள்ளன.

சர்வதேச நீரிழிவு சம்மேளனத்தின் பிரகாரம், தெற்காசிய பிராந்தியத்தில் இலங்கை அதிகளவு நீரிழிவு நிலை காணப்படும் இடர்நிலையை எதிர்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தேசிய சுகாதார இடர்நிலையை புரிந்து கொண்டு, நீரிழிவை கட்டுப்படுத்துவது தொடர்பில் நாடு முழுவதிலும் பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தனிநபர் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கு அவசியமான சாதனங்கள் மற்றும் கட்டமைப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கவும், சமூக ஈடுபாட்டை கட்டியெழுப்பவும் பங்களிப்பு வழங்க யூனியன் அஷ்யூரன்ஸ் முன்வந்துள்ளது.







# Sysco LABS விற்கு விருது

உள்ளக செயன்முறை, தொழில்நுட்பம் அல்லது கட்டமைப்பு பிரிவில் சிறந்த புத்தாக்கத்துக்கான விருதை தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் அதன் 'Excellence Hub' தீர்வுக்காக சுவீகரித்தது.

தொடர்ச்சியான இரண்டாவது வருடமாகவும், Sysco LABS' Delivery Excellence அணியினர், SLASSCOM Ingenuity விருதுகள் வழங்கும் நிகழ்வில், உள்ளக செயன்முறை, தொழில்நுட்பம் அல்லது கட்டமைப்பு பிரிவில், சிறந்த புத்தாக்கத்துக்கான விருதை தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் பெற்றுக் கொண்டது.

மேலும், நிறுவனத்தின் கட்டமைப்பு சேவைகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வியாபார அலகான Hybrid Cloud Operations அணியினால் வடிவமைக்கப்பட்ட 'Patch 360' tool க்கு, தேசிய மட்டத்தில் அதே விருதின் மூன்றாமிடம் வழங்கப்பட்டிருந்தது.

உலகின் மாபெரும் உணவு சேவை வழங்குநரான Sysco க்கு, தொடர்ச்சியான புத்தாக்கம் மற்றும் பெருமளவு பெறுமதியை பெற்றுக் கொடுப்பதில் காண்பிக்கும் ஒப்பற்ற அர்ப்பணிப்பு இந்த வெற்றிகளினூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

# கணனிகள் அன்பளிப்பு



Yamaha Outboard Motors (OBM) உடன் இணைந்து Associated Motorways (Private) Limited (AMW) நிறுவனமானது சிலாபம், அம்பகந்தவிலவில் உள்ள புனித ரோச்சஸ் கல்லூரிக்கு (St. Roches College) 10 கணனிகளை நன்கொடையாக வழங்கியுள்ளது.

இந்த நிகழ்வானது, கல்விக்கு ஆதரவளிப்பதற்கும், பல ஆண்டுகளாக தங்களுக்கு ஆதரவளித்த சமூகங்களுக்கு நன்றிக்கடன் செலுத்துவதற்குமான AMW இன் அர்ப்பணிப்பை எடுத்துக் காட்டுகிறது.

Yamaha Outboard Motors நிறுவனத்திற்கு அம்பகந்தவில சமூகத்தினர் மிக முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக உள்ளனர்.

இந்த முயற்சிக்காக, நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு பாடசாலைகள் தொடர்பில் கவனமாக பரிசீலித்த பின்னர் புனித ரோச்சஸ் கல்லூரி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கணனிகளை நன்கொடையாக வழங்குவதற்கு மேலதிகமாக, கல்லூரியின் கணனிக் கூடம் முழுமையாக செயற்படுவதை உறுதி செய்யும் வகையில், அது தொடர்பான பழுதுபார்ப்புகளை முன்னெடுத்து, அனைத்து மின்சார தொடர்புகள் மற்றும் இணைப்புகளையும் AMW நிறுவனம் சீர் செய்ய நடவடிக்கை எடுத்திருந்தது.




# ஒலிம்பிக்கின் உத்தியோகபூர்வ ஆடை பங்காளராக MAS

2024 பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகளுக்கான இலங்கை தடகள அணியின் உத்தியோகபூர்வ ஆடை பங்காளராக ஆயுளு நிறுவனம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில், இலங்கை ஒலிம்பிக் குழுவினருக்கு உத்தியோகப்பூர்வ ஆடைப் பொதிகளும் வழங்கப்பட்டன.

எதிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் இலங்கையை வெற்றிகரமாக பிரதிநிதித்துவப்படுத்த இளம் விளையாட்டு வீர வீராங்கனைகளை அடையாளம் கண்டு, அவர்களின் திறன்களை மேம்படுத்தும் நோக்கில் ஆயுளு நிறுவனத்தின் முயற்சியான ஆயுளு விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கான பயிற்சி அக்கடமியின் தொடக்கமும் இந்த நிகழ்வோடு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் கல்வி அமைச்சர் கௌரவ. சுசில் பிரேமஜயந்த கலந்து கொண்டார்.

2024 பாரிஸ் ஒலிம்பிக் விளையாட்டு போட்டிகள் நடைபெறவுள்ள 2024 பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகளுக்காக

இலங்கை அணி சார்பில் கலந்துகொள்ளவுள்ள இறுதி அணி வீர வீராங்கனைகளின் விபரங்களை இலங்கை தேசிய ஒலிம்பிக் குழு அறிவித்துள்ளது.

இந்த வருடம் ஆறு பேர் கொண்ட குழுவில் மூன்று தடகள வீரர்களான தில்ஹானி லேகம்கே, தருஷி கருணாரத்ன மற்றும் அருண தர்ஷன இரண்டு நீச்சல் வீரர்களான – கைல் அபேசிங்க மற்றும் கங்கா செனவிரத்ன மற்றும் ஒரு பூப்பந்து வீரரான விரேன் நெத்தசிங்க ஆகியோர் முதல் முறையாக ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கவுள்ளனர்.

# Queen of the World 2.0 இற்கு விண்ணப்பியுங்கள்!




Season 01 நிகழ்ச்சியின் மகத்தான வெற்றியைத் தொடர்ந்து, மிகவும் எதிர்பார்க்கப்பட்ட Second Season – Queen of the World Sri Lanka 2.0 போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதை உத்தியோகபூர்வமாக அறிவிப்பதில் Queen of the World Sri Lanka (QOTW) பெருமிதம் அடைகிறது.

உள்ளீர்த்தல் மற்றும் வலுவூட்டுதல் ஆகிய தமது முக்கிய மதிப்பீடுகளைக் கட்டியெழுப்வுவதன் மூலம், 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து இலங்கைப் பெண்களிடமிருந்தும் Queen of the World Sri Lanka 2.0 விண்ணப்பங்களை கோருகிறது.

இப்போட்டியானது ஒவ்வொரு பெண்ணும் தனது திறமை, கருணை, அசைக்க முடியாத மனப்பான்மையை வெளிப்படுத்துவதற்கான ஒரு தளத்தை உறுதி செய்யும் வகையில், Miss Category: (18-29 வயது, திருமணமாகாத), Ms. Category: (30+ வயது, திருமணமாகாத), Mrs. Category: (திருமணமான), Elite Category: (50+ வயது, திருமணமான, திருமணமாகாத, பெண்களின் கருணை, அழகு, ஞானத்தை கொண்டாடுதல்) ஆகிய சிறப்பு வாய்ந்த நான்கு தனித்தனி பிரிவுகளை கொண்டுள்ளது.

பாரம்பரிய போட்டி வடிவத்தை தாண்டி, தனிப்பட்ட வளர்ச்சி மற்றும் தனக்குள் உள்ள திறமையை கண்டுபிடித்தல் அம்சங்களை வளர்க்கின்றதும், மாற்றத்தை ஏற்படுத்துகின்றதுமான அனுபவத்தை Queen of the World Sri Lanka 2.0 வழங்குகிறது.

# PLC Al-Safa நாடளாவிய ரீதியில் விஸ்தரிப்பு



இலங்கையில்முதலாவது, வங்கி அல்லாத, முழுமையான சேவைகளை வழங்கும் இஸ்லாமிய நிதி வழங்குனர் என்ற சிறப்பைக் கொண்ட பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பீஎல்சி Al-Safa பிரிவு 2005 ஆம் ஆண்டு முதல் நம்பகமான மற்றும் விசுவாசமான ஷரியா-இணக்கப்பாட்டு வழங்கல்கள் மற்றும் சேவைகளை வழங்கி வருகின்றது.

கடந்த இரு தசாப்தங்களாக, உயர் தரமான மற்றும் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய சேவைகளை வழங்குவதில் அது நன்மதிப்பைக் கட்டியெழுப்பியுள்ளது.

முழுமையாக ஷரியா-இணக்கப்பாடு கொண்ட, மாற்று நிதியியல் தீர்வுகளை நாடுகின்ற இலங்கை மக்களுக்கு Al-Safa சேவைகளை வழங்கி வருகின்றது.

செயற்பட ஆரம்பித்தது முதல் PLC Al-Safa ஆனது ஷரியா-இணக்கப்பாட்டு நிதிக் கட்டமைப்பினுள் புத்தாக்கத்தின் மீது அர்ப்பணிப்புடன் இயங்கி வருகின்றது.

ஷரியா மேற்பார்வை சபையை வலுப்படுத்தி இணக்கப்பாடு மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றின் மீதான தனது அர்ப்பணிப்பை இந்நிறுவனம் மேம்படுத்தியுள்ளது.
தனது வழங்கல்கள், சேவைகள் மற்றும் நடைமுறைகளை கிரமமான அடிப்படையில் தொடர்ச்சியாக மீளாய்வு செய்து, அவை ஷரியா கோட்பாடுகளுக்கு இணங்குகின்றன என்பதை உறுதி செய்வது மட்டுமன்றி, அதிகபட்ச மதிப்பு, நெகிழ்வுத்தன்மை மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றையும் வழங்குகின்றன என்பதை உறுதி செய்வதற்கு இது PLC Al-Safa க்கு இடமளிக்கின்றது.



# சிங்கப்பூரில் சிறப்பாகச் செயற்பட்ட டேவிட் பீரிஸ் விளையாட்டு வீரர்கள்

சிங்கப்பூரில் அண்மையில் நடைபெற்ற ளுஆவுகுயு இன்டர் நஷனல் மாஸ்டர் ட்ரக் அன்ட் ஃபீல்ட் சம்பியன்ஷிப் 2024 போட்டிகளில் உலகம் முழுவதிலும் 22 நாடுகளிலிருந்து 1200ற்கும் அதிகமான வீர வீராங்கனைகள் பங்குபற்றியதுடன், இதில் கலந்துகொண்ட டேவிட் பீரிஸ் குழும அணி 12 தங்கப் பதக்கங்கள், 9 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் 3 வெண்கலப் பதக்கங்கள் உள்ளடங்கலாக 24 பதக்கங்களை வெற்றிகொண்டது.

வர்த்தக நிறுவனங்களுக்கிடையிலான தடக்களப் போட்டி 2023ல் சிறப்பாகச் செயற்பட்டு அதிலிருந்து தகுதி பெற்ற 32 பேரைக் கொண்ட இலங்கை அணியில் டேவிட் பீரிஸ் குழுமத்தைச் சார்ந்த 8 பேர் கொண்ட அணி இந்தப் பெருமைக்குரிய போட்டியில் பங்குபற்றியது.

டேவிட் பீரிஸ் குழுமத்திலிருந்து பதக்கங்களை வென்றவர்களில், கயேஷா திசாநாயக (4 தங்கப்பதக்கங்கள் - சுத்தியல் எறிதல், ட்டிபிள் ஜம்ப், 100x4, 400x4, 1 வெள்ளிப்பதக்கம் - நீளம்பாய்தல்), கயானி வாசனா (4 தங்கப் பதக்கங்கள் - 100 மீட்டர், 400 மீட்டர் தடைதாண்டல், 100x4, 400x4), சிசுறு பெர்னான்டோ (3 தங்கப் பதக்கங்கள் - உயரம் பாய்தல், நீளம் பாய்தல், 400 மீட்டர் தடைதாண்டல்), மிஹிரனி பெரேரா (3 தங்கப் பதக்கங்கள் - நீளம் பாய்தல், 400 மீட்டர் தடைதாண்டல், 100x4, 1 வெள்ளிப்பதக்கம் - சுத்தியல் எறிதல்), கல்பனி பெர்னான்டோ (1 தங்கப்பதக்கம் - 400,4, 1 வெள்ளிப்பதக்கம் - ட்ரிபிள் ஜம்ப், 1 வெண்கலப் பதக்கம் - உயரம் பாய்தல்), டமித் மதுஷங்க (1 தங்கப் பதக்கம் - 800 மீட்டர், 1 வெள்ளிப்பதக்கம் - 1500 மீட்டர்), கசுன் ஷியாமல் (3 வெள்ளிப்பதக்கங்கள் - 400 மீட்டர் தடைதாண்டல், 100x4, 400x4), மல்ஷி பெர்னான்டோ (2 வெள்ளிப்பதக்கங்கள் - 100 மீட்டர், 200 மீட்டர்) ஆகியோர் அடங்குகின்றனர்.

டேவிட் பீரிஸ் குழுமத்திலிருந்து திரு.வருண உடவத்த, வர்த்தக நிறுவனங்களின் தடக்கள சம்மேளனத்தைப் பிரதிநிதித்தி குழுவின் முகாமையாளராகக் கலந்துகொண்டதுடன், அவர் 2 வெள்ளிப் பதக்கங்கள் (100ஒ4 மீட்டர் ரிலே, 400x4 மீட்டர் ரிலே) மற்றும் 2 வெண்கலப் பதக்கங்கள் (100 மீட்டர் தடைதாண்டல், 400 மீட்டர் தடைதாண்டல்) ஆகிய பதக்கங்களை வெற்றிகொண்டிருந்தார்.

## SLICGL - ஹமீடியா இணைவு



ஸ்ரீ லங்கா இன்ஷ்ரன்ஸ் கோர்பரேஷன் ஜெனரல் லிமிடெட் (SLICGL) நிறுவனம் ஆடவர் ஆடைகள் உற்பத்தித் துறையில் தரம் மற்றும் நவநாகரிகத்தில் முன்னணியில் திகழும் வர்த்தக நாமமான ஹமீடியா நிறுவனத்துடன் மூலோபாய பங்காளித்துவத்தை அறிவித்துள்ளது.

இலங்கையின் காப்புறுதி சந்தையில் முதன்முதலாக எடுக்கப்பட்டிருக்கும் இந்த தனித்துவ முயற்சி, SLICGLஇன் மோட்டார் ப்ளஸ் பூரண காப்புறுதி உரிமையாளர்களுக்கு பிரத்தியேகமான தள்ளுபடிகள் மற்றும் நன்மைகளை வழங்குகிறது. இந்த இணைவு ஜுன் 28, 2024 அன்று Envoy Mansionஇல் இடம்பெற்ற புரிந்துணர்வு ஒப்பந்த (MoU) பரிமாற்றத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இரு தரப்பினதும் முக்கிய பிரதிநிதிகளின் முன்னிலையில் இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஹமீடியாவின் பிரதிநிதிகளாக அதன் பணிப்பாளர்களான மிகைல் ஹமீட், அம்ஜத் ஹமீட் மற்றும் ஹசன் உஸ்ரி ஆகியோருடன் அதன் CIO/ ஆலோசகரான கலும் ஜயசேகர, மனிதவள மற்றும் செயற்பாடுகளின் தலைவர் A.T.M. ஃபர்ஸான் மற்றும் பிரதேச முகாமையாளர் தனுஷ்க வெலகெதர ஆகியோர் பங்கேற்றனர்.

SLICGLIப் பிரதிநிதித்துவப்படுத்தி அதன் பிரதம செயற்பாட்டு அதிகாரியான பிரியந்த பெரேரா, பெருநிறுவன வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல் உதவிப் பொது முகாமையாளர் மகேஷ் கமகே மற்றும் பெருநிறுவன வர்த்தகப் பிரிவின் பொதுத் துறையின் சிரேஷ்ட முகாமையாளர் ரவி மெடிஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம், மோட்டார் ப்ளஸ்ஸின் பூரண காப்புறுதி உரிமையாளர்கள் hameedia.com, signature.lk மற்றும் அனைத்து ஹமீடியா மற்றும் சிக்னேச்சர் (Signature) கடைகளில் கொள்வனவை மேற்கொள்ளும்போது 15% விலைக்கழிவையும், கொழும்பு 03இல் அமைந்துள்ள Envoy Mansionஇன் My Friend Caféஇல் 15% விலைக்கழிவையும் பெறுவார்கள்.

பாரம்பரிய காப்பீட்டு சலுகைகளுக்கு அப்பால் வாடிக்கையாளர் மதிப்பை மேம்படுத்துவதற்கான SLICGLஇன் அர்ப்பணிப்பை இந்த மூலோபாய இணைவு பிரதிபலிக்கிறது.

ஹமீடியாவுடன் இணைவதன் மூலம் SLICGL வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் அன்றாட வாழ்க்கை முறைகளை செழுமைப்படுத்தும் வெகுமதிகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## Flying Doctor Service Clinic வெற்றிகரமாக நிறைவு




இலங்கையில் நடைமுறையில் உள்ள வாகன இறக்குமதி கட்டுப்பாடுகள் காரணமாக, நுகர்வோர் புதிய வாகனத்தை நோக்கி செல்வதற்கான வாய்ப்பு மிகவும் குறைவாகவே உள்ளது.

இந்த காரணத்திற்காக, உற்பத்தியாளர்கள் தங்கள் வாகனங்களின் செயல்திறன் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, பரிந்துரைக்கும் பராமரிப்பு நடவடிக்கைகளை சரியாக பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை, Mercedes-Benz AG இன் சர்வதேச தொழில்நுட்ப நிபுணரான சௌரப் சிங் வலியுறுத்தினார்.

Mercedes-Benz இன் இலங்கையின் ஒரே அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தரான DIMO ஏற்பாடு செய்த ஆநசஉநனநள-டீநணெ Flying Doctor Service Clinic இல் அவர் இந்தக் கருத்துகளை வெளியிட்டார்.

Flying Doctor Service Clinic ஆனது Mercedes-Benz உரிமையாளர்களுக்கு, அவர்களது வாகனங்களின் பராமரிப்பு தொடர்பாக அவர்களது வாகன உற்பத்தியாளரிடம் இருந்து பெறக்கூடிய நிபுணத்துவ ஆலோசனை சேவைகளை வழங்குகிறது.

இது தொடர்பில் வாடிக்கையாளர்கள் கொண்ட மிகுந்த ஆர்வத்திற்கு மத்தியில் முப்பது பேருக்கு வாய்ப்பளிக்கும் வகையில் 2 நாள் நிகழ்ச்சி முன்னெடுக்கப்பட்டது.



## அரச ஊழியர்களுக்கு நிதியியல் நெகிழ்வு

DFCC வங்கி, “DFCC Garusaru Hybrid Personal Loan” என்ற புதுமையான புதியதொரு கலப்பு தனிநபர் கடன் வசதியொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

இக்கடன் திட்டமானது ஓய்வு பெறும் வயதை அண்மிக்கின்ற அரச ஊழியர்களுக்கான விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், அவர்களின் முக்கிய தேவைகளுக்கான ஒரு தீர்வாகவும் காணப்படுகின்றது.

வழக்கமான கடன் திட்டங்கள் போல் அல்லாது, DFCC Garusaru Hybrid Personal Loan தனிநபர் கடன் திட்டமானது கடனைப் பெற்றுக்கொள்கின்றவர்கள் பணியாற்றும்போதும் மற்றும் ஓய்வு பெற்ற பின்னரும் கடனை மீளச் செலுத்தும் வகையில் தனித்துவமான சிறப்பம்சத்தை வழங்குவதுடன், வங்கித்துறையில் குறிப்பிடத்தக்கதொரு சாதனையாகவும் மாறியுள்ளது.

இன்னும் 6 ஆண்டுகளுக்குள் ஓய்வு பெறும் வயதை அண்மிக்கின்ற அரச ஊழியர்களின் நிதியியல் தேவைகளை நிறைவேற்றும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள DFCC Garusaru Hybrid Personal Loan ஆனது பொதுவான சவாலுக்கு நெகிழ்வானதொரு தீர்வாக அமைந்துள்ளது.

அந்த வகையில் அதிகபட்சமாக ரூபா 5,000,000/- வரையான கணிசமான நிதியை அணுகுவதற்கு இத்தீர்வு அரச ஊழியர்களுக்கு வலுவூட்டுகிறது. குறைந்தபட்ச மாதாந்த சம்பளமாக ரூபா 30,000/- உடன் நிரந்தர சேவையிலுள்ள அனைத்து அரச ஊழியர்களும் இதற்கு தகமை உடையவர்கள். கடனைப் பெறுகின்றவர்கள் 75 வயதை எட்டுவதற்கு முன்பதாக கடன் பெற்ற தொகை முழுவதையும் மீளச் செலுத்தும் வகையில், இக்கடன் 20 ஆண்டுகள் வரையான தவணைக்காலத்தையும் கொண்டுள்ளது.